**22.06.2018**

**பொருள் எண்.1**

திருச்செங்கோடு நகராட்சியில் 27.04.2018ம் தேதி வரை மொத்தமுள்ள 27611 குடியிருப்புகளில் 16002 குடியிருப்புகளுக்கு மட்டுமே நகராட்சியின் மூலம் குடிநீர் இணைப்பு வழங்கப்பட்டுள்ளன. எனவே குடிநீர் இணைப்பு அல்லாத 12761 குடியிருப்புகளுக்கும் புதியதாக Internal Plumping மூலம் வீட்டு குடிநீர் இணைப்புகள் வழங்கும் பணிக்காக மதிப்பீடுகள் தயார் செய்து விரிவான திட்ட அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதன் அடிப்படையில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.13277/20187/WS1, நாள்.19.06.2018ப்டி மேற்கண்ட பணிக்கு ரூ.425.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

எனவே தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUIFDCO) மூலம் ரூ.425.00 இலட்சத்திற்கு வட்டி இல்லா கடனாக பெற்று மேற்கண்ட பணியை மேற்கொள்ளவும் மற்றும் தொழில்நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்கவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) மேற்கண்ட பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.425.00 இலட்சத்தை தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் உட்கட்டமைப்பு மேம்பாட்டு கழகம் (TUIFDCO) மூலம் வட்டி இல்லா கடனாக பெற்ற பணியினை மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட பணிக்கு தொழில்நுட்ப அனுமதி பெற நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களுக்கு உரிய பிரேரணைகள் சமர்ப்பிக்க தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.57/2018/இ2)

**பொருள் எண்.2**

திருச்செங்கோடு நகராட்சிக்குட்பட்ட கல்வி நிறுவனம் மற்றும் அரசு உதவி பெற்று சுயநிதி படிப்பு நடத்தி வரும் கல்வி நிறுவன கட்டிடங்களுக்கு சொத்துவரி விதிக்க சட்ட திருத்தம் செய்யப்பட்டுள்ள அறிக்கையினை அரசிதழில் வெளியீடு செய்வதற்கு பக்கம் 1க்கு 2100/— வீதம் 2 பக்கத்திற்கு 2x2000=4200/— கிளை அச்சகம் , சேலம் கணக்கில் செலுத்துமாறு துணைப் பணி மேலாளர் அரசு கிளை அச்சகம், சேலம் அவர்களின் 19.06.2018ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அரசிதழில் வெளியீடு செய்வதற்கு ரூ.4200/— பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.1334/2018/அ2)

**<u>பொருள் எண்.3</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.கே.செந்தில்முருகன் அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்புத் தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.3,92,342/– திரு.கே.செந்தில்முருகன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வருவாய் நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2640/2018/அ2)

**<u>பொருள் எண்.4</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.கே.செந்தில்முருகன் அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்புத் தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.9,864/– திரு.கே.செந்தில்முருகன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

கல்வி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2640/2018/அ2)

**<u>பொருள் எண்.5</u>**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.ஜி.கமலகண்ணன் அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்புத் தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.11,770/– திரு.ஜி.கமலகண்ணன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வருவாய் நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2641/2018/அ2)

**பொருள் எண்.6**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.ஜி.கமலகண்ணன் அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்புத் தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்புத் தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.21,419/– திரு.ஜி.கமலகண்ணன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

கல்வி நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.2641/2018/அ2)

**பொருள் எண்.7**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் அவர்களுக்கு 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்பு தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால்

| | | |
|---|---|---|
| 1 | வருவாய் நிதி | ரூ.391479/– |
| 2 | குடிநீர் நிதி | ரூ.8500/– |
| 3 | கல்வி நிதி | ரூ.27890/– |
| | **மொத்தம்** | **ரூ.427869/–** |

மேற்கண்ட தொகையினை ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் காப்பரேசன் அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. வருவாய் நிதி செலவிலிருந்து ரூ.391479/– வழங்கலாம்.
2. குடிநீர் நிதி செலவிலிருந்து ரூ.8500/– வழங்கலாம்.
3. கல்வி நிதி செலவிலிருந்து ரூ.27890/– வழங்கலாம்.

(கோப்பு எண்.203/2018/அ2)

**பொருள் எண்.8**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.காளிமுத்து அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்பு தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.18,349/– திரு.எஸ்.காளிமுத்து அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

வருவாய் நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.203/2018/அ2)

**பொருள் எண்.9**

திருச்செங்கோடு நகராட்சியில் ஒப்பந்ததாரர் திரு.எஸ்.காளிமுத்து அவர்கள் 2004–2005 முதல் 2013–2014 வரை மேற்கொள்ளப்பட்ட பணிகளுக்கு அன்னார் அவர்கள் செலுத்திய முன்வைப்பு தொகை மற்றும் பில் பட்டியலில் பிடித்தம் செய்த வைப்பு தொகைகள் காலாவதி வைப்பு தொகைக்கு கொண்டு செல்லப்பட்டதால் ரூ.2,385/– திரு.எஸ்.காளிமுத்து அவர்களுக்கு வழங்க தனி அலுவலர் அவர்களின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

குடிநீர் நிதியிலிருந்து செலவினை மேற்கொள்ளலாம்.

(கோப்பு எண்.203/2018/அ2)

**பொருள் எண்.10**

திருச்செங்கோடு நகராட்சில் 2018ம் ஆண்டு வைகாசி விசாக தேர்திருவிழாவினை முன்னிட்டு கிருமி நாசினிகள் மற்றும் துப்புரவு பணிகளுக்கு தேவையான தளவாட சாமான்கள் வாங்க 26.04.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் விலைப்பட்டியல் பின்வருமாறு.

| வ. எண் | பணி விவரம் | ஸ்ரீகாளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் ரூ. | திருச்செங்கோடு அக்ரோ இஞ்சினியாிங் & சர்வீஸ் கோ– ஆப்ரேட்டிவ் ரூ. |
|---|---|---|---|
| 1 | நீர்த்த சுண்ணாம்புத் தூள் – (ஒரு கிலோ விலை) | 9.20 | 9.45 |
| 2 | பினாயில் ( வாசனை வெள்ளை நிறம் ) – (ஒரு லிட்டர் விலை) | 87 | 90 |
| 3 | பிளீச்சிங் பவுடர் - (ஒரு கிலோ விலை) | 39 | 42 |
| 4 | கைப்பிடியுடன் கூடிய இரும்பு கூர்மை கொக்கி (ஒன்றின் விலை) | 794 | 797 |
| 5 | அரிவாள் பெரியது (ஒன்றின் விலை) | 615 | 710 |
| 6 | அரிவாள் சிறியது (ஒன்றின் விலை) | 195 | 198 |
| 7 | சாக்கடை சுரண்டி பிடியுடன் கெட்டி இரும்பு தகடு (ஒன்றின் விலை) | 370 | 372 |
| 8 | சவுள் (ஒன்றின் விலை) | 815 | 820 |
| 9 | கழிப்பிட பிரஷ் பிளாஸ்டிக் பிடியுடன் நரம்பு பிரஷ் (ஒன்றின் விலை) | 140 | 213 |
| 10 | கைப்பிடியுடன் கூடிய மண்வெட்டி – (ஒன்றின் விலை) | 396 | 400 |
| 11 | இரும்பு பக்கெட் (ஒன்றின் விலை) | 230 | 354 |
| 12 | மூங்கில் கூடை (ஒன்றின் விலை) | 430 | 435 |
| 13 | நைலான் பிளாஸ்டிக் பேசின் (ஒன்றின் விலை) | 740 | 743 |
| 14 | தென்னை விளக்குமாறு (ஒன்றின் விலை) | 36 | 40 |
| 15 | மோப்பிங் பிரஷ் (ஒன்றின் விலை) | 240 | 355 |
| 16 | சாக்கடை கரண்டி 4 பல் உடையது பிடியுடன் கூர்மையுடன் (ஒன்றின் விலை) | 840 | 846 |

| | | | |
|---|---|---|---|
| 17 | குப்பை அள்ளும் பிளாஸ்டிக் பேஷின் (ஒன்றின் விலை) | 348 | 350 |
| 18 | குப்பை அள்ளும் தகரம் (ஒன்றின் விலை) | 118 | 120 |
| 19 | தென்னை விளக்குமாறு கட்ட நூல் கயிறு (ஒன்றின் விலை) | 340 | 342 |
| 20 | இரும்பு பிக்காஸ் (ஒன்றின் விலை) | 760 | 766 |
| 21 | பிளாஸ்டிக் குடம் (ஒன்றின் விலை) | 135 | 197 |
| 22 | குப்பை போடும் பிளாஸ்டிக் பக்கெட் (ஒன்றின் விலை) | 130 | 215 |
| 23 | அலுவலக அறை கூட்டும் கைமாறு (ஒன்றின் விலை) | 230 | 233 |
| 24 | கடப்பாறை (ஒன்றின் விலை) | 840 | 847 |

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான தொகை வழங்கிய ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

பொதுசுகாதாரப்பிரிவின் அவரச அவசியம் கருதி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று ஸ்ரீ காளியம்மன் டிரேடிங் கார்ப்பரேசன் நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2419/2018/எச்1)

<u>பொருள் எண்.11</u>

திருச்செங்கோடு நகராட்சி பகுதியில் உள்ள தெப்பக்குளத்தின் கரையில் கட்டிடம் கட்டி பயன்படுத்தப்பட்டு வருகிறது. மேற்படி கட்டிடம் இடிந்து விழும் நிலையில் உள்ளதால் மனுதாரர் திருமதி.ஆர்.பங்கஜம் க/பெ.(லேட்)ஆர்.எஸ்.ரத்தினம் என்பவருக்கு நோட்டிஸ் வழங்கப்பட்டு அதனடிப்படையில் நகராட்சிக்கு எதிராக சென்னை உயர்நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கினை நகராட்சி சார்பாக ஏற்று நடத்தவும், வழக்கிற்கான கட்டணம் ரூ.10,000/– (ரூபாய் பத்தாயிரம் மட்டும்) திரு.எஸ்.சரவணன், சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் அவர்களுக்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு</u>

அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.10741/2014/எப்1)

**பொருள் எண்.12**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.22 SND ரோடு அருகில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடை மிகவும் பழுதடைந்து மேற்கூரை இடிந்து விழும் நிலையில் உள்ளதால் நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வில் அறிவுறுத்தலின்படி மேற்கண்ட இடத்தில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான கடையை மராமரத்து பணி மேற்கொள்ள ஆகும் உத்தேச செலவினம் ரூ.52,000/—க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.898/2018/இ1)

**பொருள் எண்.13**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.18 அம்மன் குளம் அருகில் உள்ள பள்ளி வாசல் பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாததால் அடிக்கடி நீர்தேங்கி சாலை மற்றும் வீடுகளில் நீர் புகுவதாலும் மற்றும் சாலையில் நீர் தேங்குவதால் தொற்றுநோய் ஏற்பட வாய்ப்பு உள்ளதாலும் அப்பகுதி மக்களின் நலன் கருதி நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் அவர்களின் நேரடி ஆய்வில் தெரிவிக்கப்பட்ட அறிவுரையின்படி மேற்கண்ட இடத்தில் புதியதாக மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் (Culvert) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.9,00,000/—க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2990/2018/இ1)

**பொருள் எண்.14**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.28 பிள்ளையார் கோவில் அருகில் உள்ள சிறுபாலம் பழுதடைந்து வாகனம் செல்ல சிரமமாக உள்ளதாலும் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுவதாலும் பொதுமக்கம் பயன்படுத்தாமல் உள்ளது. எனவே நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் நேரடி ஆய்வில் அறிவுறுத்தியபடி மேற்கண்ட இடத்தில் புதியதாக சிறுபாலம் (Culvert) அமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.2,00,000/—க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2991/2018/இ1)

**பொருள் எண்.15**

திருச்செங்கோடு நகராட்சி வார்டு எண்.11 கூட்டப்பள்ளி நெடுஞ்சாலைத்துறை சாலையில் இருந்து SPK பள்ளி அலுவலகம் வரை உள்ள சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்கள் மிகவும் சிரமப்படுவதால் நகராட்சி பொறியாளர் மற்றும் ஆணையாளர் அவர்களின் அறிவுரையின்படி மேற்கண்ட இடத்தில் புதியதாக தார்சாலைஅமைக்க ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,50,000/—க்கு தனி அலுவலர் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1) தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
2) மேற்கண்ட செலவினத்தை இந்நகராட்சி வருவாய் நிதியில் இருந்து மேற்கொள்ள தனி அலுவலர் அனுமதிக்கலாம்.
3) தனி அலுவலர் முன் அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதை தனி அலுவலர் அனுமதிக்கலாம்.

(கோப்பு எண்.2930/2018/இ1)